## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS 112 of 2013 | **DW - 1** | **:** | Cross continuation |
| **Name** | சுப்பிரமணி | **Father Name** | **:** | முனியப்ப கவுண்டர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 08.01.2026 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் - 12.15 PM

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. வாதி பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் வாதி கோரி உள்ளது போல தீர்ப்பாவது எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் எனக்கு விற்பனை செய்த சொத்துக்கள் போக மீத சொத்துக்களில் பாகம் ஆவதில் எனக்கு ஆட்சபனை இல்லை எனது மனைவிக்கு எதிராக தான் இந்த வழக்கு தாக்கல் செய்தார்கள் அவரின் பொது அதிகார முகவராக நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். மாணிக்கத்திற்கு பூர்வீக சொத்துக்களில் பாகம் வந்த நிலத்தில் ஒரு பங்கு தான் எனது மனைவிக்கு கிரயம் கொடுத்த சொத்து என்று சொன்னால் சரிதான். மாணிக்கம் குடும்பத்தில் அவருக்கும் அவரது மக்களுக்கும் எந்தவித பாகமும் பிரித்துக் கொள்ளவில்லை அது எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். வழக்கிற்கு முன்னிட்டு எனது மனைவிக்கு வாதி ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்று சொன்னால் இல்லை. சர்வே எண் 18/3 எங்கு உள்ளது அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் அந்த சொத்தை நாங்கள் தான் வாங்கி உள்ளோம். அந்த சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் அது எனக்கு தெரியாது அதில் யார் யார் கிரயம் வாங்கி உள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் நாங்கள் வாங்கி உள்ளோம் வேறு யார் வாங்கினார்கள் என்று தெரியாது.

2. என்னுடைய பதிலுரையில் வாதியின் தந்தை மாணிக்கம் 20 சென்ட் வாங்கியுள்ளார் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதில் மாணிக்கம் எந்த திசையில் சொத்து வாங்கினார் என்று தெரியுமா என்றால் நான் வாங்கியுள்ள நிலத்திற்கு வடக்குபுறம் வாங்கியுள்ளார். அந்த சர்வே எண்ணில் மாணிக்கம் வாங்கிய நிலத்தையும் மற்ற நிலங்களையும் பிரிக்கும் வகையில் அத்துவரப்பு உள்ளதா என்றால் மாணிக்கம் வாங்கிய பின் வரப்பு அமைத்துள்ளார். நான் சொல்வது தவறு அந்த சர்வே எண்ணில் மொத்தம் உள்ள 0.50.0 கெக்டர் நிலம் முழுவதும் மாணிக்கமே அனுபவம் செய்து வந்ததால் தான் அவர் பெயரில் பட்டா வழங்கலாம் என்று வட்டாட்சியர் உத்தரவு வழங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் நான் 50 சென்ட் நிலத்தை கிரயம் வாங்கினேன் என்றால் ஆமாம். அந்த சொத்திற்கு யார் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்று பார்த்து தான் வாங்கினேனா என்றால் பார்த்தேன் ஜீவானந்தம் மற்றும் கங்காதரண் பெயரில் இருந்தது. வேறு யார் பெயரிலும் இல்லையா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் சான்று நகல் நான் கிரயம் வாங்கியதாக சொல்லும் ஆவணத்தின் சான்று நகல் என்று சொன்னால் சரிதான் அந்த கிரைய ஆவணத்தில் அப்போது யார் பெயரில் பட்டா இருந்தது என்ற பட்டாவும் இணைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

3. மேற்படி கிரைய ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனவே நான் கிரயம் வாங்கும் சமயத்திலேயே பட்டா கூட்டாக இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் இதற்கு முன் எனக்கு கிரயம் கொடுத்த இரண்டு நபர்கள் பெயரில் மட்டும்தான் பட்டா இருந்தது என்று சொல்வது தவறா என்றால் தவறுதான். வாதியின் தம்பி திருமால் ஒரு விபத்தில் இடுப்புக்கு கீழ் உள்ள பகுதிகள் செயலிழந்து பாதிக்கப்பட்டு உள்ளார் என்று சொன்னால் சரிதான். அதேபோல் மாணிக்கம் இறுதி காலத்தில் புற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்டு மிகவும் உடல் நிலை சரியில்லாமல் இருந்து விட்டார் என்று

சொன்னால் அது எனக்கு தெரியாது. பி.வா.ச.ஆ 1 ஆவணத்தை எதற்காக ஒப்படைத்துள்ளேன் என்று சொன்னால் நான் கிரையம் வாங்கிய பின்பு மாணிக்கம், சாந்தி, வேலு ஆகியோர் திருமாலுக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளனர் அதற்காக அது ஒப்படைத்துள்ளேன். நான் சொல்வது தவறு அந்த ஆவணம் திருமால் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவர் கடன் வாங்குவதற்காக எழுதப்பட்டது என்று நினைத்து வாதி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல அது கிரைய ஆவணம் என்று தெரிந்துதான் கையொப்பம் செய்துள்ளார். மாணிக்கத்தின் பூர்வீக சொத்துக்களில் பாகம் ஏற்படாத நிலையில் எனது மனைவி பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல அவருக்கு மீதமுள்ள சொத்துக்களில் பாகம் எடுத்துக் கொள்ளட்டும்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.

**முடிவு நேரம் –12.42 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.